UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# அகத்தூண்டுதல் (Inspiration) நோக்கு: திருஞானசம்பந்தர் பதிகக் கட்டமைப்பும் சைவசமய அரசியல் வெளிப்பாடும்

**முனைவர் பி. பாலசுப்பிரமணியன்**
உதவிப் பேராசிரியர், முதுகலைத் தமிழாய்வுத்துறை
பச்சையப்பன் கல்லூரி, சென்னை - 30

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழில் தொல்காப்பியம், சங்க இலக்கியத்திற்குப் பிறகு உருவான அனைத்து இலக்கியங்களும் சமயச் சார்புடையவைகளாகப் படைக்கப்பட்டுள்ளதைத் தமிழ் இலக்கிய வரலாறு மூலமாக அறிய முடிகிறது. குறிப்பாக, தொல்காப்பியம், சங்க இலக்கியத்திலும் சமய ஊடாட்டம் நிலவியிருப்பதையும் அறிகிறோம். தமிழ் மொழி என்றாலே சமயம் என்று உணருமளவிற்குச் சமய இலக்கியங்கள் குவிந்து போய்க்கிடக்கின்றன. இந்தியாவிற் குள்ளிருந்தும் வெளியிலிருந்தும் உருவெடுத்த சமயவாதிகள் தமது சமயக் கருத்தியல்களை மக்களிடம் போதிக்கப் புனிதநூல்களைக் கட்டமைத்தனர். இவர்களுக்கு அவர்கள் வாழ்ந்த காலத்தில் அரசியல் சார்பும் இருந்ததை உணர முடிகிறது. இந்தச் சமய நிறுவனங்கள் உருவாகுவதற்கு முன்பு தமிழர்களின் வழிபாட்டு மரபு என்னவாக இருந்தது? என்ற கேள்வியும் நம்மிடம் உண்டு. அதை நாட்டுப்புற மக்களின் இயற்கை வழிபாட்டிலிருந்து உள்வாங்கிக் கொள்கிறோம். குறிப்பாக, சமணம், பௌத்தம், சைவம், வைணவம், இசுலாம், கிறித்தவம் ஆகிய சமயங்களுக்கும் தமிழுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு எனில் எம்மாதிரியான தொடர்பு? தமிழால் சமயம் வளர்ந்ததா? சமயத்தால் தமிழ் வளர்ந்ததா? ஒவ்வொரு சமயமும் மக்களிடையே தங்களது கருத்தியல்களை அடையாளப்படுத்தத் தமிழைப் பயன்படுத்திக் கொண்டனவா? என்ற கேள்விகளோடுதான் சமயத்தை அணுக வேண்டியிருக்கிறது. அதனடிப்படையில் திருஞானசம்பந்தர் பாடல்களின் அமைப்பு அரசியலை ஆய்வுக்குட்படுத்தி விவாதத்தை முன்வைக்க விழைகிறது இக்கட்டுரை.

**முதன்மைச் சொற்கள்:** சமயம், நிறுவனங்கள், வைதீகம், அவைதீகம், சைவம், வைணவம், அகத்தூண்டுதல், Inspiration, பதிகம், திருக்கடைக்காப்பு.

## முன்னுரை

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் சைவம். சைவசமயத்தின் பரப்புரை நூல்கள் பன்னிரு திருமுறைகளாகும். சிவனை வழிபடக்கூடிய அறுபத்து மூன்று அடியார்களின் வாழ்வியல் அனுபவங்களைத் தொகுத்து சுந்தரர் திருத்தொண்டத்தொகை என்றும் நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி என்றும் பாடியுள்ளனர். இதனைத் தழுவி சேக்கிழார் பெரியபுராணம் என்ற நூலைப் படைத்துள்ளார். இந்நூலில் சேக்கிழார் திருஞானசம்பந்தரின் வாழ்வியலுக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்து, பிள்ளை பாதி, புராணம் பாதி என்று சொல்லுமளவிற்குப் பல பாடல்களை இயற்றியது ஏன்? சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் என்ற சமயக்குரவர் நால்வருள் திருஞான சம்பந்தருக்கு மட்டும் பேரிடம் கொடுப்பது ஏன்? அவர் பிராமணச் சமயத்தவர் என்பதாலா? மற்ற குரவர்கள் நால்வரை விட சம்பந்தருக்கு வயதும் குறைவு, பிறகு ஏன் சேக்கிழார் இவரைத் தனித்து அடையாளப்படுத்த வேண்டும்? இதற்குப் பின்னுள்ள அரசியல் என்ன? என்ற கேள்விகளில் எழுந்ததுதான் இந்தக் கட்டுரை உருவாக்கத்திற்கான கருதுகோள்

என்பேன். குறிப்பாக, திருஞான சம்பந்தரின் பதிக அமைப்பு மற்ற சைவ சமயப் படைப்பாளிகளின் பாடல்களை விடத் திட்டமிட்டுப் பாடப்பட்டுள்ளதாகக் கருதுகிறேன். அந்தப் பாடல்கள் அமைப்பின் பின்னுள்ள அரசியலையும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

**பன்னிரு திருமுறைகள்**

சைவசமய வழிபாட்டுப் பாடல்களாகக் கருதப்படுபவை பன்னிரு திருமுறைகளாகும். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு, அவரது அடியவர்கள் பாடியப் பாடல்களின் தொகுப்புகள் பன்னிரு திருமுறைகள் என அழைக்கப்படுகின்றன. சிவனை முறையாக வழிபடக்கூடிய இப்பாடல்களுக்குத் திருமுறை எனப் பெயரிடப்பட்டிருக்கின்றனர். இந்தப் பன்னிரு திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி ஆவார். 27 சிவனடியார்கள் இணைந்து பாடிய பாடல்கள் 76நூல்களாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இவர்கள் பாடியவை 18326 பாடல்களாகும். சைவத்தில் பன்னிரு திருமுறைகள், பெரிய புராணம், திருவிளையாடற்புராணம் என வரையறுத்திருப்பதற்கும் வைணவத்தில் பன்னிரு ஆழ்வார்கள் பாடிய நாலாயிர திவ்ய பிரபந்தம், தசாவதாரங்கள், இராமாயணம், மகாபாரதம் என வரையறுத்திருப்பதற்கும் உள்ள சமன்நிலை கேள்விக்குரியதாக இருக்கிறது. இந்தத் தொகுப்பு அரசியல் பற்றியும் ஆய்வு நிகழ்த்த வேண்டிய தேவையிருக்கிறது.

**திருஞானசம்பந்தர்**

சோழநாட்டைச் சார்ந்த சீர்காழியில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் சிவபாத இருதயர், பகவதி அம்மையாருக்கு மகனாகப் பிறந்தவர் திருஞானசம்பந்தர். அந்தண மரபில் கவுணியர் குலத்தைச் சார்ந்தவர் என்று இவரைக் குறிப்பிடுவர். “வையம் வாழ யாம்வாழ“ என்று நம்பியாண்டார் நம்பியும் “கொன்றையான் அடியலாற்பேணா எம்பிரான் சம்பந்தன்” என்று சுந்தரரும் இவரது அவதாரப் பிறப்பைச் சிறப்பித்துக் கூறுவர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என சைவசமயக் குரவர்களாக அழைக்கப்படுகின்ற இந்த நால்வர்களுள் முதன்மையானவராகக் கருதப்படுபவர் திருஞானசம்பந்தர். இவர் பாடிய 4146 தேவாரப் பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப் பட்டுள்ளன. திருமுறைகளில் அதிகமாகப் பாடல்களைப் பாடியவரும் இவரே. மற்ற அனைவரும் குறைவான பாடல்களைப் பாடியுள்ளனர். அதன்காரணமாக இவரது பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டனவா? இல்லை இவர் அந்தணர் சமூகத்தைச் சார்ந்தவர் என்பதால் முதன்மைப்படுத்தப் பட்டாரா? என்ற கேள்வியும் உண்டு. சீர்காழி சிவன் கோயிலில் பூசைசெய்யக் கூடியவர் சிவபாத இருதயர். ஒரு நாள் பூசை செய்வதற்கு முன்பு, அங்குள்ள கோயில் குளத்தில் நீராட மூழ்கியிருக்கிறார். அப்போது, உடன் வந்திருந்த சம்பந்தர் தந்தையைக் காணாது அழ, சிவனருளால் பார்வதி ஞானப்பால் அளித்து மறைந்திருக்கிறார். குளத்தில் நீராடி வெளிவந்த இருதயர் சம்பந்தரின் வாயில் ஒட்டியிருந்த பாலைக் கண்டு வியந்து யார் பால் கொடுத்தார் என வினவ, மூன்று வயதே ஆன சம்பந்தர் கோயிலின் கருவறையைக் காட்டி, தோடுடைய செவியன் என்ற முதற்பதிகப் பாடலைப் பாடியிருக்கிறார். அன்றிலிருந்து அவர் தமது இறைப்பணியைத் தொடர்ந்து, சிவலோகம் அடைகிற வரை பல சிவதலங்களுக்குச் சென்று திருமுறைப்பாடல்களைப் பாடியிருக்கிறார் என்ற வரலாற்றை அறிந்து கொள்கிறோம். சம்பந்தர் வரலாற்றைத் தர்க்கத்தின் அடிப்படையில் ஆராய்ந்தால், சம்பந்தர் மூன்று வயதில் பாடியிருக்க முடியுமா? அதுவும் 4146 பாடல்கள் பாடியிருப்பது சாத்தியமா? சிவதலங்கள் இருக்கிற அனைத்து ஊர்களுக்கும் அவர் எப்படிப் பயணித்திருப்பார்? யார் உதவியிருப்பார்கள்? மக்களை சைவசமயத்திற்கு மாற்றத் தூண்டியிருக்கிறார் என்றால், அதற்குரிய அரசியல் பின்புலம் என்ன? அதன் பின்னணி யாது? அவர் பதினாறு வயதில் சிவனை அடைந்ததாகச் சொல்வது உண்மைதானா? அவர் நிகழ்த்திய அற்புதங்கள் என்ற பட்டியல்கள் புனைவானதா? இப்படிப் பல வினாக்கள் எழுகின்றன.

**திருஞானசம்பந்தர் பதிகக் கட்டமைப்பு**

திருஞானசம்பந்தர் பாடிய ஒவ்வொரு பதிகத்திலும் பத்துப் பாடல்களும் அந்தப் பாடல்களை முறையாகப் பாடுவதனால் கிடைக்கக்கூடியப் பலன்கள் என ஒரு பாடலுமாக மொத்தம் 11பாடல்கள் அமைந்துள்ளன. பதிகப்பலன் என்று குறிப்பிடக்கூடிய 11ஆவது பாடலைத் திருக்கடைக்காப்பு என்று குறிப்பிடுவர். ஆனால், சம்பந்தர் பதிகத்தை வாசிக்கிற போது, இந்தப் பாடல்கள் அனைத்தும் திட்டமிட்டுப் பாடப் பட்டுள்ளனவா? ஒருவேளை வாய்மொழியாகப் பாடப்பட்ட அந்தப் பாடல்களை எழுத்தாக்குகிற போது, பாடல்கள் திட்டமிட்டுக் கட்டமைக்கப்பட்டதா? என்ற கேள்விகள் எழுகின்றன. சான்றாக, திருப்பிரம்மபுரம் என்ற பதிகத்தில் சிவனின் திருக்கோலம், அவனது கருணை, சிவனை வழிபடுபவர்களுக்கு அருள்புரியும் பண்பு எனத் தொடர்ந்து ஏழு பாடல்கள் அமைந்திருக்கின்றன.

**'வியர்இலங்குவரை உந்திய தோள்களை**
**வீரம்விளை வித்த**
**உயர்இலங்கைஅரை யன்வலிசெற்றுஎனது**
**உள்ளம்கவர் கள்வன்**
**துயர்இலங்கும்உல கில்பலஊழிகள்**
**தோன்றும்பொழுது எல்லாம்**
**பெயர்இலங்குபிர மாபுரமேவிய**
**பெம்மான்இவன் அன்றே'[1].**

என்ற எட்டாவது பாடலில், சினத்தின் வயப்பட்டு வீரத்தைக் காட்டும் வகையில் கயிலையைப் பெயர்த்த இலங்கை அரசனுடைய வலிமையை அழித்து எனது உள்ளத்தைக் கவர்ந்த ஈசன், வினையின் கன்மத்தைச் சேர்த்துத் துயரை விளைவிக் கும் இந்த உலகில் ஊழிக் காலத்திலும் அழியாமல் நிலைத்து நின்று தனது சிறப்பினை நல்கும் பதியாகிய பிரமபுரத்தில் மேவியவன். அவன் இவனல்லா! என்று சிவனைப் பாடுகிறார் சம்பந்தர். இந்தப் பாடலில் இராவணன் சிவனுக்குக் கீழாவன், இராவணன் வலிமையை விட சிவன் வலிமை பெரியது எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

**'தாள்நுதல் செய்துஇறை காணியமாலொடு**
**தண்தாமரை யானும்**
**நீணுதல்செய்துஒழிய நிமிர்ந்தான் எனது**
**உள்ளம்கவர் கள்வன்**
**வாள்நுதல்செய்மக ளிர்முதலாகிய**
**வையத்தவர் ஏத்தப்**
**பேணுதல்செய்பிர மாபுரமேவிய**
**பெம்மான்இவன் அன்றே'[2].**

என்ற ஒன்பதாவது பாடலில், திருவடியைக் காணத் திருமாலும் திருமுடியைக் காணப் பிரமனும் முயற்சி செய்ய அவர்கள் செயல் பயனற்றவாகச் செய்யும் வகையில் நீண்டு வளர்ந்தவனாகிய ஈசன் எனது உள்ளத்தைக் கவர்ந்தவன். வாள்போன்ற நெற்றியை உடைய மகளிர் முதலாக உலகத்தவர் அனைவரும் ஏத்தப் பேணிக் காக்கும் பிரமாபுரம் மேவிய பெருமான் இவன் அல்லவா! என்று சிவனைப் பாடியுள்ளார் சம்பந்தர். இந்தப் பாடலில் திருமால், பிரம்மனால் காண அரியாதவன் சிவன் என்ற கருத்து திணிக்கப்படுவதைக் காணலாம்.

**'புத்தரோடுபொறி யில்சமணும்புறம்**
**கூறநெறி நில்லா**
**ஒத்தசொல்லஉல கம்பலிதேர்ந்தெனது**
**உள்ளம்கவர் கள்வன்**
**மத்தயானைமறுக அவ்உரிபோர்த்ததோர்**
**மாயம்இது என்னப்**
**பித்தர்போலும்பிர மாபுரமேவிய**
**பெம்மான்இவன் அன்றே'[3].**

என்ற பத்தாவது பாடலில், புலன் உணர்வு களை நீத்த புத்தரும் சமணரும் நன்னெறி யில் அமையாத மாற்றுக் கருத்துக்களைக் கூறிடினும் பிச்சையேற்று எனது உள்ளத்தைக் கவர்ந்து, செருக்குற்ற யானையை அழித்து அதன் தோலைப் போர்வையாக்கிக் கொண்டு பின்னர் மாயை காட்டிப் பித்தனைப் போன்று பிரமாபுரம் மேவிய பெருமான் இவனல்லவா! என்று சிவனை சம்பந்தர் பாடியிருக்கிறார். இப்பாடலில் சமண, பௌத்த சமயத்தின் மீதான சம்பந்தரின் எதிர் கருத்து வெளிப் படுகிறது.

**'அருநெறியமறை வல்லமுனியகன்**
**பொய்கையலர் மேய**
**பெருநெறியபிர மாபுரமேவிய**
**பெம்மான்இவன் தன்னை**
**ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம்**
**பந்தன்உரை செய்த**
**திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை**
**தீர்தல் எளி தாமே'[4].**

என்ற பதினொன்றாவது பாடலில், மறைவல்ல பிரமன் பூசித்த பிரமாபுரம் மேவிய பெருமானை ஒன்றிய மனத்தினால் உணர்ந்து ஞானசம்பந்தன் உரைத்தத் திருநெறிய இத் தமிழ்ப் பதிகத்தை ஓதவல்லவருடைய தொல்வினை எளிதாகத் தீரும் என்று சம்பந்தர் பாடியிருக்கிறார். ஒரு படைப்பாளி எப்படி, தமது பாடலை இறை வழிபாடாகப் பாடினால் தொல்வினை தீரும் என்று குறிப்பிடுவார். இக்கருத்து முன்னுக்குப் பின் முரணாக உள்ளதாக அறிகிறேன்.

மேற்கண்ட நான்கு பாடல்கள் கட்டமைப்பு திருஞானசம்பந்தரின் அனைத்துப் பதிகத்தி லும் அமைந்திருக்கின்றன என்பதுதான் இங்கு விவாதத்திற்குரியதாக இருக்கிறது. ஓர் அடியவர் ஒரு கடவுள் மீது ஆழ்ந்த பற்றுடையவராக இருப்பின், அவர் அந்தக் கடவுள் மீதான காதலையும் கடவுளுக்கும் அவருக்குமான உறவையும் நெருக்கத்தை யும் பாடலாமே ஒழிய, என்னுடைய கடவுள் பிற கடவுளை விட உயர்ந்தவர் என்றும் பிற சமயங்களை விட எமது சமயம் உயர்ந்தது என்றும் எப்படிப் பாட முடியும்? அவ்வாறு பாட வேண்டிய அவசியம் யாது? அதற்குப் பின்பு இருக்கின்ற அரசியல் என்ன? என்பதை ஆய்வு நிகழ்த்த வேண்டிய அவசியம் இருக்கிறது.

### அகத்தூண்டுதல் (Inspiration) - திருஞான சம்பந்தர்

ஒரு படைப்பாளி எப்படி உருவாகின்றான் என்பதை நம்மால் அறுதியிட்டுக் கூற முடியாது. பல்வேறு திட்டங்களுடன் ஒரு

படைப்பை இயந்திரமாக உருவாக்கினாலும் அதனுள் செயற்கைத் தன்மை அமைந்து விடும். ஆனால், ஒருவர் படைப்பாளி ஆவதற்கு ஒரு படைப்போ, ஒருவரின் பேச்சோ, ஓர் எழுத்தாளரோ அல்லது ஒருவரின் வாழ்வியல் அனுபவமோ காரணமாக அமை யலாம். இதனை அகத்தூண்டுதல் என்று குறிப்பிடுவர். "அகத்தூண்டுதல் என்பது, படைப்பு இயக்கத்தில் படைப்பாளி தன்னினும் மேலான சக்தியின் தூண்டுதலின் காரணமாக இயங்குகிறான் எனும் நம்பிக்கை. உலக ளாவிய நிலையில் இந்த நம்பிக்கை இருந்து ள்ளது. பிளட்டோ காலந்தொட்டு இந்த நம்பிக்கை தொடர்ந்துள்ளது. அகத்தூண்டுதல் திறமையற்ற கவிஞனையும் கவிபாடச் செய்யும் வல்லமை கொண்டது. தூண்டுதல் இல்லாத நிலையில் திறமையான கவிஞன் நல்ல கவிதைபாட இயலாது. இதன் காரணமாகவே நூலில் இறைவனை வேண்டும் மரபு எழுந்தது. கவி பாடுவது இச்சைக்கு உட்பட்டதல்ல என்னும் கருத்து இதனடிப்படையில்தான் எழுந்தது. தமிழில் இப்போக்கு நெடுங்காலமாக இருந்து வந்துள்ளது. பக்தி இயக்க காலகட்டத்தில் இறைத்தூண்டுதல் குறித்த நம்பிக்கை உச்சத்தில் இருந்துள்ளது. இறையடியார்களை இறைவனே பாடத்தூண்டுகிறார்"[5] என அகத் தூண்டல் என்பதற்கு விளக்கமளிக்கிறார் எம். வேதசகாயகுமார்.

அகத்தூண்டுதல் என்பதன் அடிப்படையில் திருஞானசம்பந்தர் பாடல்களை ஆராயப் புகுந்தால் நமக்குப் பல்வேறு புரிதல்கள் கிடைக்கின்றன.

சமண, பௌத்த சமயங்களை அவைதீக சமயம் என்று புறக்கணித்த காலமுண்டு. இந்தச் சமயங்கள் வைதீக சமயம் என்று சொல்லப்படக்கூடிய சைவ, வைணவக் கருத்தியல்களுக்கு எதிரானவை என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. மக்களை அடைவதற்குச் சமயங்களுக்கிடையே போட்டி நிலவியதை சமய வரலாற்றிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. ஆக, சைவ சமயத்தின் பெருமை யையும் சிவனின் அருளையும் மக்களிடம் கொண்டு செல்ல புனைவாக அடியவர்களின் கதைகளையும் திருப்பாடல்களையும் உருவாக்கியிருப்பார்களா? இவையனைத்தும் இறைவனின் தூண்டுதலால் பாடப்பட்டன என்ற கருத்தியல் திணிக்கப்பட்டிருக்குமா? திருமால் வைணவக் கடவுள், அது பிற சமயம். ஆனால், பிரம்மனை ஏன் இங்கு குறிப்பிட வேண்டும். ஒருவேளை அவன் பிறப்புக் கடவுள் என்பதாலா? சிவன்தான் பெரியவன் அவனுக்குக்கீழ்தான் திருமால், பிரம்மா எல்லாம் என்ற கருத்து முன் வைக்கப்படுகிறது. இங்கு இராவணனைக் குறிப்பிட வேண்டிய தேவை யாது? வைணவ இராமன் இராவணனை எதிர்த்தது போல், சிவனுக்குக் கீழான வலிமையுடையவன் இராவணன் என்ற கருத்தியல் பதவிசெய்யப் பட்டிருக்கிறதா? என்றும் அணுக வேண்டியி ருக்கிறது. சம்பந்தர் காலத்தில் இதற்கான நெருக்கடி இருந்ததா? என்ற வினாக்களைச் சம்பந்தர் பாடல்களிலிருந்து எடுத்துக்கொள்ள முடிகிறது.

## மதிப்பீடு

தமிழ்ச் சமய வரலாற்றை மறுவாசிப்பு செய்ய வேண்டிய காலத்தில் வாழ்ந்து கொண்டி ருக்கிறோம். இந்த வாசிப்பில் அனைத்து அருளாளர்களின் பாடல்களும் விடுபடக்கூடாது என்பது இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகிறது. தமிழ்ச் சமூக வாழ்க்கையில் சமயம் பெரும்பங்களிப்பை நிகழ்த்தியிருப்பினும் அவற்றின் தாக்கம் அளவிடற்கரியது. மனிதர்களை நேசிக்க வைப்பதே சமயங்களின் மைய நோக்கம் எனினும் சமயவிலாளர்களின் கருத்துகள் முரண்பட்டதாக உள்ளன. சம்பந்தர் பாடிய பதிகப் பாடல்கள் திட்டமிட்டுக் கட்டமைக்கப் பட்டிருப்பதையும் அதன் பின்புலமாக சைவசமய அரசியலும் இணைந்திருப்பதை ஆய்வின் வழி அறியமுடிகிறது.

சமகாலத்தில் நவீன சமயவியலாளர்கள் உருவாகி சமயத்தை வணிகமயமாக்கி வரும் நிலை பெருகிவருகிறது. ஆக, தமிழ் இலக்கியமரபில் கோலோச்சியிருக்கின்ற சமய மரபுகளையும் நாட்டுப்புறத் தெய்வங்கள் அனைத்தும் வைதீகத்திற்கு மாறிவருகின்ற இன்றையநிலையையும் பொருத்தி ஆய்வு களை முன்னெடுக்க வேண்டும் என்பதை முன்வைக்கிறது இவ்ஆய்வுக் கட்டுரை.

## சான்றெண் விளக்கம்

1. இராமசுப்பிரமணியம்.வ.த., பன்னிரு திருமுறைகள் (தொகுதி-I), பா.எ.8, ப.55.
2. இராமசுப்பிரமணியம்.வ.த., பன்னிரு திருமுறைகள் (தொகுதி-I), பா.எ.9, ப.56.
3. இராமசுப்பிரமணியம்.வ.த., பன்னிரு திருமுறைகள் (தொகுதி-I),பா.எ.10, ப.57.
4. இராமசுப்பிரமணியம்.வ.த., பன்னிரு திருமுறைகள் (தொகுதி-Iபா.எ.11, ப.58.
5. வேதசகாயகுமார்.எம்., இலக்கியத் திறனாய்வுக் களஞ்சியம், ப.1.

## உதவிய நூல்கள்

1. வேதசகாயகுமார். எம்., இலக்கியத் திறனாய்வுக் களஞ்சியம், 2021, அடையாளம் வெளியீடு, புத்தாநத்தம், திருச்சி.
2. இராமசுப்பிரமணியம்.வ.த., பன்னிரு திருமுறைகள் (தொகுதி-I), 2000, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.